**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 39 of 2020 |

| | | |
|---|---|---|
| Depositions of PW -3 witness for ________ | { | Prosecution<br>Defence<br>Court |

Name : ரவிச்சந்திரன்

Father's Name : த/பெ.முத்துசாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of December** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

முதல்விசாரணை

1. நான் தற்போது கே.ராயபாளையத்தில் வசித்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் லட்சுமி எனக்கு தெரியும்.

2. கடந்த 25.09.2019ம் தேதியன்று இரவு 8 மணியளவில் எங்களுடைய வீட்டிலிருந்து 100 அடி துரத்தில் உள்ள கோவில் அருகே நானும் என்னுடைய மாமா மகன் செந்தில் மற்றும் சிலர் நின்று பேசிக்கொண்டிருந்தபோது லட்சுமி பாட்டி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். அப்பொழுது இருசக்கர வாகனத்தில்

வந்த இருவர் கிழக்கிலிருந்து மேற்கு சென்று அந்த பாட்டியின் அருகே ஒருவர் மட்டும் வாகனத்தினை விட்டு இறங்கி கொண்டார். மற்றொருவர் வாகனத்தினை எடுத்துக்கொண்டு சிறிது தூரம் சென்று நின்றார். பாட்டியிடம் நின்று பேசிக்கொண்டிருந்தவர் பாட்டியின் செயினை பறித்து கொண்டு ஓடினார். அவர் நின்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் ஏறவும் இருசக்கர வாகனத்தில் சென்ற விட்டார்கள்.

4. பாட்டி போறான் போறான் என்று சத்தம் போடவும் நாங்கள் பாட்டியின் அருகில் சென்று என்னவென்று கேட்டதற்கு பர்ட்டி நகையை பறித்துக் கொண்டு ஓடுவதாக கூறினார். உடனே நாங்கள் அவர்களுக்குப் பின்னால் துரத்தி சென்றோம். ஆனாலும் நாங்கள் செல்வதற்குள் அவர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள். பாட்டியிடம் விசாரித்தத்றுகு விலாசம் கேட்பது போல் வந்தார்கள் என்றும், பேசிக்கொண்டிருந்த போது அவருடைய 6 சவரன் தங்க செயினை பறித்து சென்று விட்டதாக கூறினார்.

5. பாட்டியின் மகனை வரச்சொல்லி பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். பாட்டியிடம் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் பார்த்தால் என்னால் அடையாளம் கூற வில்லை. **(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக வில்லை. எதிரிகள் வழக்கறிஞர் பாகுபாச பிரிவு 355 ன் படி தாக்கல் செய்த மனுவில் எதிரிகளின் அடையாளம் குறித்து ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்ததன் பெயரில் மனு அனுமதிக்கப்பட்டது)**

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் 12ம் வகுப்புவரை படித்துள்ளேன். லட்சுமி, ரங்கசாமி, ஜெகநாதன், கிருஷ்ணசாமி ஆகியோரை எனக்கு நன்கு தெரியும் என்றால் உள்ளூரை சேர்ந்தவர்கள் என்பதால் எனக்கு தெரியும், உறவினர் அல்ல. போலீஸ் விசாரணையில் கூறியவற்றை தான் முதல் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை 27ம் தேதி காவல் நிலையத்திற்கு வரவழைத்தும் மேலும் சம்பவ இடத்தில் வைத்தும் விசாரித்தார்கள். காவல் நிலையத்திற்கு பகல் 11 மணியளவில் சென்றிருப்பேன்.

2. நான் மட்டும் தான் காவல் நிலையத்திற்கு சென்றேன். வேறு யார் காவல் நிலையத்திற்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. ரங்கசாமி போலீசார் என்னை வர சொன்னதாக கூறியதன் பேரில் நான் காவல் நிலையம் சென்றேன். ரங்கசாமி என்னுடைய நண்பர் என்றால் சரியல்ல. 2 வீடுகள் தள்ளி அவருடைய வீடு உள்ளது. 25.09.2019ம் தேதியன்று இரவு நன்கு மழை பெய்தது என்றால் சரியல்ல.

3. சம்பவ சமயத்தில் என்னுடன் என்னடைய மாமா மகன் செந்தில்குமார், மேலும் 2, 3 பேர் இருந்தார்கள். அவர்களுடைய பெயர் எனக்கு தெரியாது. நான் பள்ளி அருகே உள்ள டேங்க் அருகில் நின்றிருந்தோம். பாட்டி சத்தம் போடவும் தான் எங்களுக்கு சம்பவம் குறித்து தெரியவந்தது என்றால் சாதான். தெரு விளக்கு அடியில் தான் வழக்கு சம்பவம் நடைபெற்றது. என்னுடன் மாமா மகன் மற்றும் இருவர் இருந்தோம் என்றும், நாங்கள் தண்ணீர் டேங்க் அருகில் நின்றிருந்தோம் என்றும், சம்பவ இடத்தின் அரேுகெ தெரு விளக்கு இருந்தது என்ற விபரங்களை போலீசார் விசாரணையில் கூறவில்லை.

4. போலீஸ் விசாரணையில் திடீரென்று செயினை பறிக்கவும் அவர் சத்தம் போடவும் நான் நகையை பறித்தவரை துரத்த முயற்சி செய்தேன் என்று கூறியுள்ளேன் என்றாலும் அதற்கு பின்னர் தான் லட்சுமி பாட்டியை விசாரித்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதன்பிறகு பாட்டியை விசாரித்தபோது தான் 6 சவரன் நகையை பறித்து சென்றதாக பாட்டி கூறினார் என்றால் சரிதான்.

5. அதற்கு பின்னர் தான் நடந்த சம்பவம் தெரியவரும் என்றால் சரிதான். பாட்டி சத்தம்போடும்போது எதிரிகள் தப்பித்து விட்டார்கள் என்றால் சரிதான். பாட்டி சத்தம்போட்டு நாங்கள் அருகில் செல்வதற்குள் எதிரிகள் போயிவிட்டார்கள் என்றால் சரிதான். எனவே எதிரிகள் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. முதலில் எதிரிகள் நாங்கள் நின்றிருந்த இடத்தின் அருகே தான் வளைந்து யூடன் போட்டு சென்றார்கள்.

6. போலீஸ் விசாரணையில் எதிரிகள் அங்க அடையாளங்கள் குறித்து குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அது எதுவும் எனக்கு தெரியாது. எதிரிகள் வந்ததாக கூறப்படும் வாகனம் குறித்தும் பதிவெண்ணும் தெரியாது என்றால் சரிதான். அவற்றை நாங்கள் கவனிக்கவில்லை. எதிரிகள் யார் யார் என்று நான் போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் யாரும் இல்லை என்றாலும் காவல் துறையினர் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2024.12.11 16:36:44 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**